# <u>New Year Decisions on the Beatitudes (Matthew 5:3-10)</u>

***Blessed are the poor in spirit; for theirs is the Kingdom of Heaven.***

1. I shall be content with what I have; I shall not strive to become rich. (Js 2:5)
2. I shall associate with lowly people; I shall not be haughty. (Rom 12:16; Psa 131:1,2)
3. I shall love and respect little children; I shall not offend them in anyway. (Mt 18:6,10; 19:14)

***Blessed are those who mourn; for they shall be comforted.***

4. I shall search my heart while suffering; I shall not question God or blame men. (Lam 3:39-41)
5. I shall weep with the fellow-sufferers; I shall not hide myself from them. (Job 30:25; Psa 35:13,14)
6. I shall walk in brokenness realising my shortcomings; I shall not refuse correction. (Js 4:8-10)

***Blessed are the meek; for they shall inherit the earth.***

7. I shall trust the Lord to fight my battles; I shall not employ carnal methods. (Psa 37:7-11)
8. I shall accept injustice and bad treatment; I shall not fight for my rights. (1 Pet 2:18-23; 1 Cor 6:7)
9. I shall be soft and kind in my words; I shall not raise my voice in argument. (Mt 12:19; Prov 15:1)

***Blessed are those who hunger and thirst for righteousness; for they shall be filled.***

10. I shall cultivate the fruit of righteousness; I shall not partake of the works of darkness. (Eph 5:7-12)
11. I shall feed regularly on God's Word; I shall not let anything steal my Quiet Time. (Job 23:12)
12. I shall stay full of the Holy Spirit; I shall not indulge in illicit pleasures. (Eph 5:15-18)

***Blessed are the merciful; for they shall obtain mercy.***

13. I shall be a good Samaritan; I shall not withhold good from the deserving. (Psa 41:1; Prov 3:27)
14. I shall forgive others freely; I shall not lose my patience with them. (Mt 18:23-35)
15. I shall treat my subordinates kindly; I shall not forget I too have a Master in Heaven. (Eph 6:9)

***Blessed are the pure in heart; for they shall see God.***

16. I shall seek constant cleansing by Christ's blood; I shall not boast of my goodness. (1 Jn 1:7-9)
17. I shall fill my mind with virtuous thoughts; I shall not think about unedifying things. (Phil 4:7-9)
18. I shall eagerly desire entire sanctification; I shall not settle for less. (1 Thess 5:22-24)

***Blessed are the peacemakers; for they shall be called sons of God.***

19. I shall reconcile with the wronged; I shall not hold grudge against anyone. (Mt 5:23,24)
20. I shall bring unity where there is division; I shall not cause discord anywhere. (Prov 6:12-16,19)
21. I shall pray for peace in the world; I shall not be discouraged by the happenings. (1 Tim 2:1-4)

***Blessed are those persecuted for righteousness; for theirs is the Kingdom of Heaven.***

22. I shall fearlessly lead people to righteousness; I shall not compromise. (Dan 12:3; 3:16-18)
23. I shall pray for the suffering Church; I shall not betray Christians. (Eph 6:18-20; Mt 24:9,10)
24. I shall give liberally to pioneering missions; I shall not be selfish with my resources. (Phil 4:3,15,16)

*Prepared by R. Stanley*

# பாக்கிய வசனங்கள்மீது புத்தாண்டுத் தீர்மானங்கள் (மத்தேயு 5:3-10)

***ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; விண்ணரசு அவர்களுடையது.***

1. எனக்கு உள்ளவைகளில் திருப்தியாய் இருப்பேன்; பணக்காரனாக முயற்சிக்க மாட்டேன். (யாக் 2:5)
2. தாழ்ந்தவர்களோடு சகவாசம் கொள்வேன்; அகம்பாவமான சிந்தைகொள்ள மாட்டேன். (ரோ 12:16; சங் 131:1,2)
3. சிறுபிள்ளைகளை நேசித்துக் கண்ணியமாய் நடத்துவேன்; அவர்களுக்கு இடறலாயிருக்க மாட்டேன். (மத் 18:6,10; 19:14)

***துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.***

4. பாடுபடும்போது என்னை ஆராய்ந்துபார்ப்பேன்; கடவுளைக் கேள்விகேட்கவோ மனிதரைக் குற்றஞ்சாட்டவோ மாட்டேன். (புல 3:39-41)
5. வேதனையில் தவிப்போரோடு அழுவேன்; அவர்களுக்கு என்னை மறைத்துக்கொள்ள மாட்டேன். (யோபு 30:25; சங் 35:13,14,15)
6. எனது குறைபாடுகளை உணர்ந்து பணிவுடன் நடந்துகொள்வேன்; திருத்தங்களை ஏற்க மறுக்க மாட்டேன். (யாக் 4:8-10)

***சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூவுலகைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்.***

7. கர்த்தரே என் யுத்தங்களை நடத்த அவர்மீது நம்பிக்கையாயிருப்பேன்; மாம்சீக முறைகளைக் கையாள மாட்டேன். (சங் 37:7-11)
8. அநியாயத்தைப் பொறுத்துக்கொள்வேன்; எனது உரிமைகளுக்காய்ப் போராட மாட்டேன். (1 பேது 2:18-23; 1 கொரி 6:7)
9. எனது வார்த்தைகளில் கனிவாகவும் நிதானமாகவும் இருப்பேன்; விவாதத்தில் சத்தத்தை உயர்த்த மாட்டேன். (மத் 12:18-19; நீதி 15:1)

***நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.***

10. நீதியின் கனிகளை என் வாழ்வில் பெருக்குவேன்; இருட்டுச் செயல்களில் ஈடுபட மாட்டேன். (எபே 5:7-12)
11. திருவசனத்தில் தவறாது மேய்ந்துகொள்ளுவேன்; எனது ஜெபத் தியான வேளையை எதுவும் களவாடவிட மாட்டேன். (யோபு 23:12)
12. எப்பொழுதும் பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பேன்; தவறான சிற்றின்பங்களில் சிக்கிக்கொள்ள மாட்டேன். (எபே 5:15-18)

***இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.***

13. தேவையிலிருப்போருக்கு நல்ல சமாரியனாயிருப்பேன்; உதவி தேவையுள்ளோருக்கு அதை மறுக்க மாட்டேன். (சங் 41:1; நீதி 3:27)
14. மற்றவர்களைத் தயாளமாய் மன்னிப்பேன்; அவர்களிடம் என் பொறுமையை இழக்க மாட்டேன். (மத் 18:23-35)
15. எனது உதவி ஊழியரைப் பட்சமாய் நடத்துவேன்; எனக்கும் ஒரு தலைவர் விண்ணில் உண்டென்பதை மறக்க மாட்டேன். (எபே 6:9)

***இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் கடவுளைத் தரிசிப்பார்கள்.***

16. கிறிஸ்துவின் இரத்தத்தால் இடையறாது கழுவப்படுவேன்; எனது நற்குணங்களைக் குறித்துப் பெருமையடிக்க மாட்டேன். (1 யோ 1:7-9)
17. தூய எண்ணங்களாலேயே என் மனதை நிரப்புவேன்; பக்திவிருத்தியற்ற காரியங்களைச் சிந்திக்க மாட்டேன். (பிலி 4:7-9)
18. முற்றும் பரிசுத்தமாக்கப்படுதலைத் தீவிரமாய் வாஞ்சிப்பேன்; அதற்குக் குறைவானதில் திருப்தியடைய மாட்டேன். (1 தெச 5:22-24)

***சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவ புத்திரர் எனப்படுவார்கள்.***

19. தவறிழைக்கப்பட்டவரோடு ஒப்புரவாவேன்; எவருக்கும் விரோதமாக வைராக்கியமாய் இருக்க மாட்டேன். (மத் 5:23,24)
20. பிரிவினை இருக்குமிடத்தில் ஒற்றுமையைக் கொண்டுவருவேன்; எங்கும் பிளவுண்டாக்க மாட்டேன். (நீதி 6:12-15,19)
21. உலகச் சமாதானத்திற்காய்த் தவறாது ஜெபிப்பேன்; நடக்கும் காரியங்களைக் கேட்டு நம்பிக்கையிழக்க மாட்டேன். (1 தீமோ 2:1-4)

***நீதிக்காகத் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; விண்ணரசு அவர்களுடையது.***

22. மக்களைத் தைரியமாய் நீதிக்குட்படுத்துவேன்; விசாரிக்கப்படும்போது சமரசம்பண்ண மாட்டேன். (தானி 12:3; 3:16-18)
23. துன்புறும் சபைக்காய் மறவாது ஜெபிப்பேன்; கிறிஸ்தவர்களைக் காட்டிக்கொடுக்க மாட்டேன். (எபே 6:18-20; மத் 24:9,10)
24. தொலைவிடப் பணிகளுக்குத் தாராளமாய்க் கொடுப்பேன்; ஆசீர்வாதங்களைத் தன்னலமாய் அனுபவிக்க மாட்டேன். (பிலி 4:3,15,16)

*தயாரித்தவர்: R. ஸ்டான்லி*